30th April 1959]

வெளியிலிருந்து வந்தால் இறக்குமதியைத் தடை செய்யவும் முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களா ? ஒரு மருந்து பேரைக் குறிப்பிட்டுத் தடுத்தால் உடனே அந்தப் பேரை மாற்றி வேறு லேபிள் ஒட்டிவிற்கிறார்கள் இதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த மாதிரி ஆல்கஹால் மருந்துகளை விற்பது, அதை வாங்கிச் சாப்பிடுவது அதிகமாக உதகையில்தான் காணப்படுகிறது. இதைத் தெரிந்து சமீபத்தில் ஒரு நோடிபிகேஷன் வெளியிட்டிருப்பதன் காரணமாக இப்பொழுது அநேகமாகக் குறைந்துவிட்டிருக்கிறது. இதைத் தவிர்த்துவிடலாம் என்று அரசாங்கம் நம்புகிறது. உற்பத்தியாகும் இடங்களில் "கண்ட்ரோல்" செய்ய வேண்டுமென்ற அவசியம் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, apart from issuing a notification to the effect that such ingredients are prohibited from being consumed by the public, had the Government launched any cases, I mean prosecutions, against such of those who manufactured those drugs or such of those who had consumed them and were found to be intoxicated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir. Under the terms of the notification and under the terms of the law, action should have been taken against the persons concerned.

SRI K. B. S. MANI : தற்சமயம் இந்த ஆல்கஹால் விஷயமாக நோடிபிகேஷன் போடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. போலீசார் இதுவரை எத்தனை கடைகள் மீது நடவடிக்கை எடுத்து கோர்ட்டிலே நிரூபித்து தண்டனை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள் ? அப்படி இல்லையென்றால், போலீசாருக்கு உடனடியாக ஒரு "ரிமைண்டர்" கொடுத்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று சொன்னேன். முன்பு தமிழிலேயே சொன்னேன் இதன் விளைவு உதகையில்தான் அதிகமாக இருந்தது. இப்பொழுது அனேகமாக மறைந்துவிட்டது.

SRI A. VEDARATHNAM : இந்த "ட்ரக் கண்ட்ரோல் ஆக்ட்" பிரகாரம் நடவடிக்கை எடுப்பதில் போலீஸ்காரர்களுக்கு அதிகாரம் இல்லையல்லவா ? ஒரு ஜில்லாவுக்கு ஒரு "ட்ரக் இன்ஸ்பெக்டர்" போடப்பட்டிருக்கிறது. அவரால் தீவிரமாகக் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. போலீசாருக்கும் இந்த அதிகாரம் கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீசுக்கு அதிகாரம் இருக்கிறது. இது அதிகமாக இருந்தது உதகையில். இப்பொழுது இருக்கும் அதிகாரத்தை வைத்தே தவிர்க்கப்பட்டிருக்கிறது. சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியமோ, அதிகாரத்தை அதிகப்படுத்த வேண்டிய அவசியமோ இல்லை.

Cement

*294 *Q.*—SRI A. VEDARATHNAM and SRI M. KALYANASUNDARAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த மாகாணத்திலுள்ள சிமிட்டி தொழிற்சாலை ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் எவ்வளவு சிமிட்டி உற்பத்தியாகிறது ?

(ஆ) நம் மாகாணத்தில் ஆண்டுதோறும் சிமிட்டியின் தேவை என்ன ?

[30th April 1959

(இ) பற்றுக்குறையானால் எப்படி எங்கிருந்து பூர்த்தி செய்கிறார்கள் ? உபரியானால், எப்படி எங்கெங்கே விநியோகம் செய்கிறார்கள் ?

(ஈ) அரசாங்கம் மேற்கொண்ட பிறகு கைத்தொழிலில் ஏற்பட்டிருக்கும் குறிப்பிடத் தகுந்த அபிவிருத்தி என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) A statement [a] showing the quantity of cement produced by each of the three factories in the State and the annual requirement of cement of the State for the last four years is placed on the table of the House.

(c) As the entire production of cement by the Cement Factories has been taken over by the State Trading Corporation (Private), Limited, from 1st July 1956 information is not available.

(d) Central Government have not taken over the industry but only the distribution through the State Trading Corporation.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது தேவைக்கு அதிகமாக "சிமெண்ட்" உற்பத்தியாகிக்கொண்டிருக்கும் காரணத்தால் இனிமேலும் இந்த டிஸ்ட்ரிபியூஷன் அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டியது அவசியமா ? இல்லையென்றால் அதைத் தளர்த்த அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இது பற்றி பார்லிமெண்டில் கேள்வி போடவேண்டும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal to bring down the price of cement, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : That is also within the jurisdiction of the Central Government.

Irrigation schemes for Tirunelveli district

* 295 *Q*.—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Works be pleased to state the minor and major irrigation schemes that are under investigation in respect of the Tirunelveli district?

THE HON. SRI P. KAKKAN : A list [b] of irrigation schemes which were investigated and are under investigation in respect of the Tirunelveli district is placed on the table of the House.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இன்வெஸ்டிகேஷன் பண்ணிய வைகளில் எத்தனை இந்த வருஷத்தில் எடுத்துக் கொள்ளப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : இன்வெஸ்டிகேஷன் செய்து அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டவுடன் அது பற்றிய பரிசீலனை செய்து முடிவு சொல்லப்படும். சீப் எஞ்சினியர் அவர்களையும், ரெவின்யூ போர்டையும் இன்வெஸ்டிகேஷன் பண்ணிய ஸ்கீம்களை அரசாங்கத்திற்கு வெகு சீக்கிரமாக அனுப்பும்படியாக கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

---

a Printed as Appendix VIII on pages 809—810 infra.

b Printed as Appendix IX on pages 810—811 infra.